## இலங்கை சுற்றுலாத்துறை மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம் - 2021

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை சுற்றுலாத்துறை மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

எனது அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிறுவகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

எனது அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை

இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிறுவகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிறுவகம் இணங்கியிருந்ததா என்பதும்,

- நிறுவகம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- நிறுவகத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமத்திற்கான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இல: 01 இன் பிரகாரம் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ஒன்றுக்கொன்று எதிரீடு செய்யப்படக்கூடாத போதிலும் ரூபா 10,329,730 தொகையான வங்கி மேலதிகப்பற்று காசு மீதிக்கு எதிராக எதிரீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | கணக்குகளின் பிரகாரம் எதிர்மறை பெறுமதி காணப்பட்ட போதிலும் வங்கிக் கணக்குகளின் பிரகாரம் மேலதிகப்பற்று எதுவும் நீடிப்பதில்லை. இணைத்தல் எண்ணக்கருவின் பிரகாரம் அனைத்து கணக்குகளும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டிருப்பதால், ஒட்டுமொத்த கணக்குகளிலும் மேலதிகப்பற்று நிலைமையொன்று காட்டப்படுவதில்லை. ஏனைய காசுப் புத்தகங்களின் நிலுவைத் தொகை நிதி முகாமைத்துவக் கணக்கின் மூலம் எதிரீடு செய்யப்படுகிறது. கோட்பாட்டளவில் மேலதிகப்பற்று நிலைமை காணப்படுவதில்லை. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்துடன் இணங்குதல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2014 இல் சுற்றுலாத்துறை பொலிஸ் பிரிவிடமிருந்து பெற வேண்டிய ரூபா 3,192,000 தொகையான வாடகை வருமானம் வருமானமாக இனங்காணப்பட்டு பெறவேண்டிய கடன்பட்டோரின் கீழ் காட்டப்பட்டிருந்த போதிலும் இந்தத் தொகையின் அறவீட்டுத் தன்மை நிச்சயமற்றதொன்றாக காணப்பட்டது. எனினும், அதற்கான நட்டக்கழிவு பெறுமதி கணிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | இணங்கப்பட்டுள்ளது. 2022 ஆம் கணக்கீட்டு ஆண்டில் தேவையான திருத்தங்களைச் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்களில் பெறவேண்டிய வருமானம் தொடர்பாக சரியான சீராக்கங்களை செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 3,923,058 தொகையான பௌதீக ரீதியாக சரிபார்க்கப்பட்ட கையிருப்பை இருப்பு பதிவேடுகளின் மீதிகளுடன் கணக்கிணக்கம் செய்து முரண்களை இனங்காண்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. கணக்குகளில் ரூபா 83,540 தொகையான மதுபான கையிருப்பு காணப்பட்ட போதிலும் அது பௌதீக ரீதியாக சரிபார்க்கப்பட்டிருக்கவில்லை. | எனவே, இருப்பு பெறுவனவு மற்றும் வழங்கல் எண்ணிக்கை மிக அதிகமாக உள்ளது, சரியாக பேணும் பொருட்டு களஞ்சிய கட்டுப்பாட்டு முறைமையொன்றை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன் 2022 ஆம் ஆண்டு முதல் உரிய கணக்கிணக்கங்களை சரியாக செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | இருப்பு பதிவுகளுடன் பௌதீக ரீதியாக சரிபார்க்கப்பட்ட இருப்புக்களை கணக்கிணக்கம் செய்வதன் மூலம் முரண்களை இனங்காண்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

**1.5.3 இணக்கம் செய்யப்படாத கணக்குகள் அல்லது ஏடுகள்**

| | விடயம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா | தொடர்புடைய ஏட்டின் பிரகாரம் ரூபா | வேறுபாடு ரூபா | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து பெறவேண்டிய காசு | 5,774,778 | 6,512,810 | 738,032 | இணங்கப்பட்டுள்ளது. 2022 ஆம் கணக்கீட்டு ஆண்டில் தேவையான திருத்தங்களைச் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | தொடர்புடைய தரப்பினர்களுடன் தொடர்புடைய கணக்குகளில் சீராக்கங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | சுற்றுலா அபிவிருத்தி வரி வருமானம் | 88,207,035 | 97,916,463 | 9,709,428 | இணங்கப்பட்டுள்ளது. 2022 ஆம் கணக்கீட்டு ஆண்டில் தேவையான திருத்தங்களைச் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | தொடர்புடைய தரப்பினர்களுடன் தொடர்புடைய கணக்குகளில் சீராக்கங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

**1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 காசு பெறவேண்டியவைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வியாபாரக் கடன்பட்டோரின் பெறுமதி ரூபா 22,756,021 ஆக காணப்பட்டதுடன் 2022 மே 31 வரையிலும் தனிப்பட்ட கடன்பட்டோரிடமிருந்து உறுதிப்படுத்தல்கள் எதுவும் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் அக் கடன்பட்டோரில் ரூபா 18,375,051 கூட்டுத்தொகை ஐந்து ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையாக காணப்பட்டதுடன் இது மொத்தக் கடன்பட்டோரில் 81 சதவீதமாகும். | இணங்கப்பட்டுள்ளது. 2022 ஆம் கணக்கீட்டு ஆண்டில் தேவையான திருத்தங்களைச் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | கடன்பட்டோரிடமிருந்து பணத்தை அறவீடு செய்வதற்கு முறையான செயன்முறையை பின்பற்ற வேண்டும். |

### 1.6.2 காசு செலுத்த வேண்டியவைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2014 ஆம் ஆண்டுக்கு முன்பிருந்து ரூபா 1,452,439 தொகையான செலுத்த வேண்டிய பெறுமதி சேர் வரி நிதிக்கூற்றுக்களில் தொடர்ந்து காட்டப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியிலும் அந்த வரித் தொகையைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இணங்கப்பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டில் சீர்செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | உரிய காலத்தில் வரியை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை ரூபா | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- | --- |
| (அ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 11 ஆம் பந்தி<br>நிறுவகத்தில் ரூபா 301,720,753 தொகையான நீண்டகால முதலீடுகள் மற்றும் ரூபா 135,000,000 தொகையான குறுகிய கால முதலீடுகள் காணப்பட்ட போதிலும், அதற்காக திறைசேரி அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | 436,720,753 | இணங்கப்பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டில் சீர்செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நிதிச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2018 திசெம்பர் 07 ஆம் திகதிய பிஈடி 03/2018 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கை மற்றும் 2021 திசெம்பர் 15 ஆம் திகதிய பிஈடி 03/2021 இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கை<br>2021 ஆம் நிதியாண்டில் நட்டம் அறிக்கையிடப்பட்டு 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது அந்த நட்டம் குறைவடைந்துள்ள நிறுவகங்களின் ஊழியர்களிற்கு ரூபா 5000 மிகையூதியம் வழங்கப்பட முடிந்த போதிலும் மீளாய்வாண்டின் போது ஒவ்வொரு ஊழியருக்கும் ரூபா 13,500 தொகை வீதம் மிகையூதியமாக ரூபா | 2,493,000 | இணங்கப்பட்டுள்ளது. 2021 ஆம் ஆண்டில் ஊழியர்களின் பொருளாதாரச் சிரமங்கள், ஊழியர் சங்கங்களினால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைகள் மற்றும் நிறுவகத்தின் செயற்பாடுகளை மேம்படுத்துதல் (மாணவர்களை சேர்த்துக்கொள்ளுதல் மற்றும் பயிற்சிகளை பூர்த்தி செய்தல்) ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு அந்தப் பணத்தை வழங்குவதற்கு பணிப்பாளர் சபை தீர்மானித்திருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | 2,493,000 கூட்டுமொத்த தொகை செலுத்தப்பட்டுள்ளது. | | | |
| (இ) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை<br>-----------------------------------------------------<br>உபகட்டுநிதியொன்று அது வழங்கப்பட்ட நோக்கம் நிறைவடைந்த பின்னர் 10 நாட்களுக்குள் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டிய போதிலும் 11 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 542,075 பெறுமதியான உபகட்டுநிதியை தீர்ப்பனவு செய்வதற்கு 21 நாட்கள் முதல் 251 நாட்கள் வரையான வீச்சில் தாமதம் ஏற்பட்டமை அவதானிக்கப்பட்டது. | 542,075 | உபகட்டுநிதி தரவு உள்ளடக்கப்பட்ட பதிவேட்டில் திசெம்பர் மாதத்தின் 03 (12/3) இற்கு பதிலாக, மார்ச் மாதத்தின் 12 (3/12) என பதிவு செய்யப்பட்டுள்ளது. இது தவிர, வழங்கப்பட்ட அனைத்து ஏனைய முற்பணங்களையும் உரிய முறையில் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2006 இன் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 8.9.1 ஆம் பந்தி<br>-----------------------------------------------------<br>பரிந்துரைக்கப்பட்ட பந்திகளின் பிரகாரம் ரூபா 250,000 இற்கு மேற்பட்ட ஒப்பந்தப் பணிகளுக்கு எழுத்து மூலம் முறையான உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் செயற்படுத்தப்பட்ட ரூபா 15,261,207 பெறுமதியான 7 ஒப்பந்தங்களுக்கு முறையான உடன்படிக்கைகளை கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 15,261,207 | இணங்கப்பட்டுள்ளது. மனித வள சட்ட உத்தியோகத்தர், உதவிப் பணிப்பாளர் பெறுகை பற்றாக்குறை காரணமாக இதனை நிறைவேற்றுவது தவிர்க்கப்பட்டிருந்த போதிலும் எதிர்காலத்தில் பரிந்துரைக்கப்பட்ட பந்திகளின் பிரகாரம் செயற்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | பெறுகை வழிகாட்டிக் கோவை வழிகாட்டல்கள் பின்பற்றப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 182,359,902 பற்றாக்குறையொன்றாக காணப்பட்டதுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 229,308,580 ஆக காணப்பட்டது. அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 46,948,678 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. சுற்றுலா அபிவிருத்தி வரியிலிருந்தான வருமானம் மற்றும் பாடசாலைக் கட்டணங்கள் அதிகரித்தமை மற்றும் ஏனைய செலவினம் குறைவடைந்தமை என்பன இம் முன்னேற்றத்திற்கு பிரதான காரணங்களாக காணப்பட்டன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2014 இல் தகவல் முறைமையொன்றை உருவாக்குவதற்கு ரூபா 3,771,216 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் நிறுவகத்தின் தேவைப்பாடுகளுடன் பொருந்தாமையின் காரணமாக அது நிறைவேற்றப்பட்ட காலத்தில் தோல்வியடைந்திருந்தது. எனினும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த பெறுமதியை நடைமுறை வேலைக் கணக்கில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இணங்கப்பட்டுள்ளது. 2022 ஆம் கணக்கீட்டு ஆண்டில் தேவையான திருத்தங்களைச் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நிறுவகத்தின் தேவைப்பாடுகளை கருத்தில் கொண்ட பின்னர் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2011 ஆம் ஆண்டில் பொருளாதார அலுவல்கள் அமைச்சிடமிருந்து வாகனம் ஒன்று பெறப்பட்ட போதிலும் 2021 திசெம்பர் 31 வரையிலும் அந்த வாகனத்தை கையேற்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாகனத்தை கையேற்பது தொடர்பான எதிர்கால நடவடிக்கைகள் சுற்றுலாத்துறை அமைச்சினால் மேற்கொள்ளப்படும். மேலும் அதற்குத் தேவையான தகவல்கள் மற்றும் ஆவணங்கள் எங்களால் ஏற்கனவே அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | வாகனத்தை கையேற்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |